**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 24.06.2025**

**O.S. 208/2007**

**வா.சா. 1 – சுடலையாண்டி பிள்ளை**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

நான் வழக்கு பட்டிகை சொத்தில் வா.சா.ஆ.6 ன் அடிப்படையில் தான் இருக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ல் 05.04.1968 லிருந்து ஒரு வருட காலத்திற்கு மட்டும் தான் எனது தந்தை எனக்கு குத்தகைக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 எனக்கு படிக்க தெரியுமா என்றால் எனக்கு தமிழ் படிக்க தெரியாது. நான் 3 ம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் தமிழில் கையெழுத்து போடுவேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் இருக்கும் கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ல் என்ன விபரம் இருக்கிறது என்று தெரிந்து தான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். வா.சா.ஆ.6 எனக்கு 04.04.1969 வரை ஒரு வருட காலத்திற்கு தான் குத்தகை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் இருக்கலாம்.

நான் வழக்கு பட்டிகை சொத்தின் பாட்டக்காரர் என்று காட்டுவதற்கு வா.சா.ஆ.6 யை தவிர வேறு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இருக்கு தாக்கல் செய்துள்ளேன். அது எந்த ஆவணம் யார் எழுதிக்கொடுத்தது என்றால் பூசாரி எழுதிகொடுத்த ஆவணம் நான் பூசாரிக்கு நெல்கொடுத்து அதற்கு அவர் ரசீது எழுதிகொடுத்த ஆவணம். மேற்படி ரசீது பாட்ட ஆவணம் ஆகாது என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு வழக்கு பட்டிகை சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் என் தந்தையிடம் தான் கேட்க வேண்டும் எனக்கு தெரியாது. எனது தந்தை 2000 ல் காலமானார். மேற்படி வழக்கு பட்டிகை சொத்து வெள்ளாளர்

டிரஸ்டிடம் இருந்து தான் எனது தந்தைக்கு கிடைத்தது என்றால் சரியல்ல. ஆகையால் வா.சா.ஆ.6 எழுதுவதற்கு எனது தந்தைக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 3 ல் 4 வரிசையில் இரண்டு ரசீதுகளில் குலசேகரபுரம் வெள்ளாளர் சமுதாய மாசாண சுடலைமாட சுவாமி கோவில் வகைக்கு என்று உள்ளது மற்ற ரசீதில் குலசேகரபுரம் சுடலைமாட சுவாமி கோவில் என்று உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் குலசேகரபுரம் வெள்ளாளர் சமுதாய மாசாண சுடலைமாட சுவாமி வகைக்கு என்று உள்ளது என்றால் சரியல்ல நான் அடைக்கவில்லை. வெள்ளாளர் சமுதாய டிரஸ்டில் நான் எந்த வருடம் டிரஸ்டியாக இருந்தேன் என்றால் ஞாபகம் இல்லை. சுடலைமாடசுவாமி கோவிலில் வள்ளிநாயகம் பிள்ளையை பூசாரியாக நியமித்ததற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. வள்ளிநாயகம் பிள்ளை ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலுக்கு பூசாரியாக நியமித்தவர், குலசேகரபுரம் ஊர் குலசேகரநங்கை அம்மன் சமுதாய டிரஸ்டுமூலமாக நியமித்தவர் என்றால் சரியல்ல. வள்ளிநாயம் பிள்ளை காலஞ்சென்று விட்டார். வா.சா.ஆ.2 எனக்கு வள்ளிநாயம் பிள்ளை தரவில்லை என்றால் சரியல்ல.

ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் உரிமையாளரிடம் பாட்ட நெல் கொடுத்து ரசீது வாங்கியதாக ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 ல் பொருளாளர் என்று கையொப்பம் இட்டவர் யார் என்றால் நல்லபெருமாள் பிள்ளை. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலுக்கும் நல்லபெருமாள் பிள்ளைக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா. சா.ஆ,4 ல் 3.09.2014 க்கு பிறகு பாட்டம் கொடுத்ததாக காட்டுவதற்கு ஏதேனும் ரசீது உள்ளதா என்றால் இருக்கிறது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆற்றங்கரை சுடலைமாட

சுவாமி கோவில் உரிமையாளரிடம் நான் எவ்வித பாட்டமும் கொடுக்கவில்லை ஆகவே ரசீதும் என்னிடம் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தினை கைவசம் வைத்துக் கொண்டு பாட்டம் கொடுக்காமலும் நெல்லும் கொடுக்காமல் கைவசம் வைத்துள்ளதால் எனக்கு இந்த வழக்கில் எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல பாட்டம் கொடுக்க அவசியம் இல்லை. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 எது சம்மந்தமான புத்தகம் என்றால் பூசாரியிடம் நெல்கொடுத்து அவரிடம் பெற்றுக் கொண்ட பாட்ட ரசீது புத்தகம். வா.சா.ஆ.1ல் யாரால் எழுதப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1ல் 24.10.1968ல் எழுதியிருக்கும் நபர் தான் 07.03.1983லும் எழுதியுள்ளார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1 நான் எனது நபர்களை கொண்டு தயார் செய்து என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பத்மநாபன் என்பவரை யார் பூசாரியாக நியமித்தார் என்றால் நான் தான் நியமித்தேன். எந்த வருடம் நியமித்தேன் என்றால் நியாபகம் இல்லை பத்மநாபன் காலஞ்சென்று விட்டார். வா.சா.ஆ.1ல் பத்மநாபன் கைப்பட எழுதிய ரசீதுகள் உள்ளதா என்றால் இல்லை. பத்மநாபன், வள்ளிநாயம் பிள்ளை குலசேகரநங்கை அம்மன் டிரஸ்டு மூலமாக நியமிக்கப்பட்பட்டவர் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் சாட்சியாக கையொப்பம் செய்த சுப்பிரமணியன் இருக்கிறாரா என்றால் அவர் காலஞ்சென்று விட்டார்.

ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் முன்பாக இருக்கும் மையனத்தில் தான் அந்த ஊர்வகை மக்கள் இறந்து போனால் எரியூட்டுவார்கள் என்றால் சரிதான். முதல் விசாரணை தாக்கல் செய்வதற்கு விபரங்கள் அனைத்தும் வழக்கறிஞரிடம் நான் தான் கூறினேன். முதல் விசாரணையில் குலசேகரநங்கை குலசேகரபுரம் நிர்வாகிகளாக

இருந்தாலும் வேறு யாராக இருந்தாலும் என்னை சட்டப்படியாக தான் காலிசெய்யவேண்டும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பட்டிகை சொத்து குலசேகரநங்கை அம்மன் குலசேகரபுரம் ஊர் வெள்ளாநர் சமுதாய டிரெஸ்டுக்கு பாத்தியப்பட்ட ஆற்றங்கரை சுடலைமாடசுவாமி கோவிலுக்கு உள்ள வயல் என்பதால் மேற்படி முதல் விசாரணையில் அவ்வாறு கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. குலசேகரநங்கை அம்மன் குலசேகரபுரம் ஊர் வெள்ளாநர் சமுதாய டிரெஸ்டுக்கு பட்டிகை சொத்து சம்மந்தமாக எவ்வித பாட்டமும் கொடுக்காததால் நான் குத்தகை நெல் பாக்கிதாரராக இருந்து வருவதால் எனக்கு இந்நீதிமன்றத்தில் இருந்து எவ்வித பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

நான் பாட்டம் தவறாமல் செலுத்திவருவதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. குலசேகரநங்கை அம்மன் குலசேகரபுரம் ஊர் வெள்ளாநர் சமுதாய டிரெஸ்டு எனக்கு எவ்வித பாட்டமும் எழுதிக்கொடுக்காததால் நான் வழக்கு பட்டிகை சொத்தின் பாட்டக்காரர் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து சம்மந்தமாக எவ்வித உறுத்துக்கட்டளை பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இதே நீதிமன்றத்தில் ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் எனது கைவசம் இருக்கிறது என்று சொல்லி அ.வ.எண்.59/2019 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் எனமு குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட கோவில் என்று விளம்புகை கோரி நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் எனது கைவசம் கிடையாது எனக்கும் ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

குலசேகரநங்கை அம்மன் குலசேகரபுரம் ஊர் வெள்ளாநர் சமுதாய டிரெஸ்டுதான் ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் தான் கைவசம் வைத்து கோவில் கொடைவிழா பூஜைகள் அனைத்தும் நடத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலின் முன்பாக இருக்கும் தகனமேடையில் தகனம் இறந்தவர்களை தகனம் செய்வது ஊர் டிரஸ்டிகளின் அனுமதியுடன் தான் நடந்து கொண்டிருக்கிறது என்றால் சரியல்ல. இறந்தவர்களை தகனம் செய்ய நான் ஏதேனும் அனுமதி கொடுத்துள்ளேனா என்றால் நாங்கள் கொடுக்க முடியாது. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் மற்றும் தகனமேடை இருக்கும் இடம் குலசேகரநங்கை அம்மன் குலசேகரபுரம் ஊர் வெள்ளாநர் சமுதாய டிரெஸ்டுக்கு உரிய இடம் என்றால் சரியல்ல. ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலின் பராமரிப்பும்கொடைவிழா மற்றும் பூஜைகள் அனைத்தும் குலசேகரநங்கை அம்மன் குலசேகரபுரம் ஊர் வெள்ளாநர் சமுதாய டிரெஸ்டு செய்து கொண்டிருப்பதால் ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவில் பெயரில் இருக்கும் வழக்கு பட்டிகை சொத்தும் குலசேகரநங்கை அம்மன் குலசேகரபுரம் ஊர் வெள்ளாநர் சமுதாய டிரெஸ்டு கீழ் தான் இருக்கிறது என்றால் சரியல்ல.

ஆற்றங்கரை சுடலைமாட சுவாமி கோவிலின் பராமரிப்பும், கொடைவிழா மற்றும் பூஜைகள் சம்மந்தமாக நான்டிரஸ்டியாக இருக்கும் சமயத்தில் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி விபரங்களை அ.வ.எ.ண்.59/2019 வழக்கில் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தின் உரிமையாளரின் உரிமையை மறுப்பதாலும் பாட்டம் ஒழுங்காக கொடுக்காததாலும் வழக்கு பட்டிகை சொத்தின் பாட்டக்காரர் இல்லை என்பதாலும் பலவந்தமாக சொத்தை கைவசம் வைத்திருப்பதாலும் நான் சொத்து சம்மந்தமாக எந்த வித நிவாரணமும் நீதிமன்றத்தில்

இருந்து பெற உரிமை இல்லாதவர் என்றால் சரியல்ல. வழக்க பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**